**மன்னார் பிரதேச சபை**

-----------------------------

**மன்னார் மாவட்டம்**

------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 24 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஆண்டிற்கான கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 18 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து மன்னார் பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுகள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) செலுத்தப்படாத ஓய்வூதியப் பங்களிப்பு ரூபா 804,647 என கணக்குகளில் காட்டப்பட்டுள்ள போதிலும், ஓய்வூதியத் திணைக்களத்தின் கடிதத்தில் ரூபா 3,663,917 ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை செலுத்தப்பட வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தது. இதனால் ரூபா 2,859,270 தொகையான ஓய்வூதியப் பங்களிப்பு சென்மதி கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் ரூபா 15,594,800 பெறுமதியான 13 வேலைகளிற்காக மூலதன செலவினம் செய்யப்பட்ட போதிலும் அவை நிலையான சொத்துக் கணக்குகளில் சேர்க்கப்படாமையால் சொத்துக்கள் ரூபா 15,594,800 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(இ) மீளாய்வாண்டில் அலுவலகப் பாவனையில் இருந்த ரூபா 100,000 பெறுமதியான போட்டோ பிரதி இயந்திரம், புதிய போட்டோ பிரதி இயந்திரம் ஒன்று ரூபா 125,000 இற்கு கொள்வனவு செய்யும் வகையில் மாற்றீடாக வழங்கப்பட்ட போதிலும் கணக்குகளில் இருந்து குறைக்கப்படாமையால் நிலையான சொத்து ரூபா 100,000 ஆல் கூட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான மானிய வருமதி ரூபா 168,000 கணக்குகளில் வருமதியாக காட்டப்படாமையால் சொத்துக்கள் ரூபா 168,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(உ) மீளாய்வாண்டின் கணக்கறிக்கையில் 2014 ஆம் ஆண்டிற்கு முன்னரான பெக்கோ லோடர் வருமதி ரூபா 885,530 கணக்குகளில் காட்டப்படாமையால் நடைமுறைச் சொத்து ரூபா 885,530 குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஊ) சபையினால் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணம் மற்றும் அதற்கான பெறுமதிசேர் வரி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கறிக்கையில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | சட்டம், விதி மற்றும் பிரமாணம் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவு | சபையினால் தொலைத் தொடர்பு கோபுரங்களின் வருமானங்களை அறவிடுவதற்கான உப விதிகளை சபை சட்டமாக்குவதற்குத் தவறியுள்ளது. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபை (நிதியும் நிர்வாகமும்) | |
| | (i) விதி இலக்கம் 5(xii) | காசு, களஞ்சியப் பொருள் முதலியவற்றுடன் தொடர்பு கொண்டுள்ள உத்தியோகத்தரிடமிருந்து பிணைப் பணங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) விதி இலக்கம் 59 | ஒவ்வோராண்டு தொடக்கத்திலும் வருமான பரிசோதகர், வருமான மேற்பார்வையாளர் அல்லது தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் வேறு உத்தியோகத்தர் சபைப் பிரதேசத்தில் கணிப்பீடொன்றை மேற்கொண்டு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவிற்கு அமைவாக வியாபாரங்கள் பற்றிய நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) விதி இலக்கம் 178(3) | பொருட்களை வழங்குவதற்காக நிறுவனங்களின் நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நிதி ஒழுங்குவிதி | |
| | (i) நி.பி. 371 பிரிவு 2 (ஆ) மற்றும் பிரிவு 5 | 04 சந்தர்ப்பங்களில் ரூபா 20,000 தொகையினை மிகைத்து முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் கருமம் முடிவடைந்து உடன் தீர்த்திருக்கவில்லை. |
| | (ii) நி.பி. 571 | 1984 – 2013 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதிகளில் 06 காலங் கடந்த வைப்புக்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 49,983 ஆகும். |
| (ஈ) | மத்திய அரசு பணிப்பாளர் நாயகத்தின் 2010 மார்ச் 10 ஆம் திகதிய PF/R/2/2/3/5/(4) ஆம் இலக்க கடிதத்தின் 1:4:1 ஆம் பந்தி | வருடாந்த செயற்பாட்டு அறிக்கை அறிக்கையிடும் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

-------------------

### 2.1 நிதி விளைவுகள்

-------------------------

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,194,743 தொகையாக காணப்பட்டிருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,340,703 தொகை காணப்பட்டது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

-------------------------------

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

----------------------------------------

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமான மூலம் | பாதீடு (ரூபா) | உண்மை (ரூபா) | வேறுபாடு (ரூபா) | வேறுபாட்டு வீதம் |
|---|---|---|---|---|
| வாடகைகள் | 4,301,652 | 8,850,411 | 4,548,759 | 106 |
| உரிமங்கள் | 1,222,900 | 1,528,415 | 305,515 | 25 |
| சேவைகளுக்கான கட்டணங்கள் | 1,239,900 | 820,793 | (419,107) | (34) |
| பற்றாணைச்செலவுகள் குற்றப் பணங்கள், தண்டங்கள் | 6,933,000 | 1,767,220 | (5,165,780) | (75) |
| ஏனைய வருமானங்கள் | 4,798,183 | 5,449,827 | 651,644 | (14) |
| **மொத்தம்** | **18,495,635** | **18,416,666** | **(78,969)** | |

#### 2.2.2 வாடகை

--------

(அ) 13 இறைச்சிக்கடை மற்றும் மீன் கடைகளின் குத்தகை நிலுவை ரூபா 791,008 ஐ அறவிடுவதற்கு சபையினால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் அதிகார எல்லைக்குள் உள்ள 18 கடைகளின் குத்தகை நிலுவை ரூபா 215,700 ஐ அறவிடுவதற்கு சபையினால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் உள்ள தொலைத் தொடர்பு நிறுவனங்களின் 06 கோபுரங்களில் இருந்து ரூபா 45,000 அனுமதிக்கப்பட்ட வரி சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 முத்திரை தீர்வைக்கட்டணம்

---------------------------------

பதிவாளர் நாயகத்திடமிருந்து 2011 - 2015 ஆம் ஆண்டு வரை பெறப்பட வேண்டிய ரூபா 28,068,038 பெறுமதியான முத்திரைத் தீர்வைக் கட்டண நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 ஏனைய வருமானம்**

---------------------------

2013 – 2014 வரையான பெக்கோ லோடர் நிலுவை தொகை ரூபா 634,830 ஐ கடந்த 04 வருடகாலமாக அறவீடு செய்வதற்கோ அல்லது சட்ட நடவடிக்கை ஒன்று எடுப்பதற்கோ சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 ஒப்பந்த நிர்வாகம்**

----------------------

(அ) பிரதேச சபையினால் அமைக்கப்பட்ட பிரதான அலுவலகத்தின் வாகனத் தரிப்பிடத்தில், தரிப்பிடத்திற்கான "H" வகை இரும்புத் தூண் இடப்பட்டமை தொடர்பாக அவற்றின் உண்மை அளவினைக் கணிப்பதற்கு, நிலத்திற்குள் 0.6 m ஆகக் கொண்டு எடுக்கப்பட்ட அளவின் படி 33.28 lm ஆகவும் கணிப்பீட்டுத் தாளின் படி 41.20 lm என இருந்தது. இதனால் 7.92 lm கூடுதலாகக் காட்டப்பட்டு ரூபா. 27,720 பெறுமதியான கொடுப்பனவு மேலதிகமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபையினால் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட தலைமன்னார் உபஅலுவலக நூலகத்தில் புதிதாகப் பொருத்தப்பட்ட யன்னல்களின் உண்மையான அளவிடையானது 12.56 $m^2$ எனக் காணப்பட்டபோதிலும் கணிப்பீட்டுத் தாளில் 16.09 $m^2$ என இருந்தது. இதனால் 3.53 $m^2$ கூடுதலாகக் காட்டப்பட்டு ரூபா. 28,240 பெறுமதியான கொடுப்பனவு மேலதிகமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

------------------------------

**3.1 முகாமைத்துவ பலவீனம்**

--------------------------

(அ) சபையின் கணக்குகளில் விதவை அனாதைகள் ஓய்வூதிய சென்மதி 2004 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 804,647 ஆகக் காட்டப்பட்டுள்ள போதிலும் மேற்படி திணைக்களத்தில் வருடாந்தம் வட்டி கணிக்கப்பட்டு 31/12/2016 இல் ரூபா 3,663,917 காட்டப்பட்டுள்ளது. இத்தாகையினை உறுதிப்படுத்தி சீர் செய்வதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெக்கோ லோடர் நிலுவை அறவீடுகளில் அரச அரச சார்பற்ற திணைக்களங்கள் சங்கங்கள் ஆலயங்கள் மற்றும் சபைகளிடம் இருந்து அறவீடு செய்ய வேண்டிய ரூபா 102,700 பெறுமதியான நிலுவைகள் அறவீடு செய்யவதற்கு எந்தவொரு நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 பிரதான அலுவலகமும் அதன் சுற்றுச் சூழலும்**

------------------------------------------------------------

(அ) பிரதான அலுவலகத்தின் நுழைவாயில் பெப்ரவரி மாதத்திலிருந்து மதிலுடன் சேர்ந்து உடைந்து காணப்பட்டபோதிலும் கணக்காய்வுத் திகதி வரை அதனைத் திருத்தி அலுவலக வளாகத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதான அலுவலகம் துப்பரவு அற்ற நிலையில் காணப்படுவதுடன் பிரதான அலுவலகத்துடன் தொடர் வேலையாக செய்யப்பட்ட கட்டிடத் தொகுதியானது முறையான இணைப்பின்றி மழைக் காலங்களில் நீர் வடிந்து ஒழுக்கும் நிலைமை காணப்படுகின்றரமயானது சுற்றுச் சூழல் பேணலில் முகாமைத்துவமின்னையைக் காட்டுகின்றது.

**3.3 அங்கீகாரமற்ற செலவினம்**

--------------------------------

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 03 யூன் 2016 ஆம் திகதிய PL/3/1/47 ஆம் இலக்க பிரதேச சபைகளை வலுவூட்டுதல் 2016 திட்டத்தின் கீழ் 5 ஆவது நிகழ்ச்சித் திட்டத்தில் ''பிரதேச சபை நூலகம் மற்றும் உப அலுவலகங்களிற்கான பெயர்ப்பலகை பொருத்துதல்'' எனக் குறிப்பிடப்பட்டு ரூபா 200,000 ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும் தலைமை அலுவலக பெயர்ப் பலகைக்காக ரூபா 145,000 பெறுமதியானது 27 ஒக்டோபர் 2016 ஆம் திகதிய 12 ஆம் இலக்க உறுதிச்சீட்டின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டமையானது அங்கீகாரமற்ற கொடுப்பனவாகும்.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

--------------------------------------------------

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

------------------------------

மீளாய்வாண்டில் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 2,428,200 தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன் செலவினங்களின் அவை 55 வீதம் - 100 வீதம் வீச்சில் காணப்பட்டது.

**4.2 சொத்து முகாமைத்துவம்**

-------------------------------

(அ) பிரதேச சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 05 வாகனங்களுக்கான ரூபா 4,332 காப்புறுதி பணத்தை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் நேரடியாக மேற்கொள்ளாமல் காப்புறுதி பிரதிநிதி மூலம் பெறப்பட்டிருந்தது.

(ஆ) 53-3325 வாகனம் பழுதடைந்து பாவிக்காத சமயத்தில் 20/10/2015 இல் E/1 099140 கட்டளை இலக்கத்தின் கீழ் 50 லீற்றர் டீசல் ரூபா 4,750 ற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவை தீர்வு செய்யப்படாமல் உள்ளது.

(இ) பழுதடைந்த நிலையிலுள்ள 03 வாகனத்திற்கான வரி அனுமதிப்பத்திரம் 2013 இல் முடிவடைந்துள்ள போதிலும் வாகனத்தின் பழுது நிலைமை குறித்த பிரதேச செயலாளருக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

--------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) வருமானச் சேகரிப்பு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) பெறவேண்டிய கணக்குகள்
(ஈ) நிலையான வைப்புக்கள்
(உ) முற்பணப் பதிவேடு
(ஊ) நிலையான சொத்துக்கள்